## திருச்சி ரயில்வே கோட்டத்தில் இந்தியில் மட்டும் பெயர்ப் பலகை:

# கருப்பு மை கொண்டு அழித்து தி.மு.க.வினர் போராட்டம்!

### மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் – மேயர் அன்பழகன் முன்னிலையில் – கழகத்தினர் முற்றுகை!







திருச்சி,மார்ச்.6-

“இந்தியில் பெயர் பலகை” வைத்திருந்த திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலையில் தி.மு.க.வினர் போராட்டம் நடத்தினர்.

ரயில்வே நுழைவு வாயில் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு மை கொண்டு அழித்தனர்.

திருச்சி ரெயில்வே கோட்ட மேலாளர் அலுவலகம் திருச்சி ஜங்சன் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ளது. அந்த ரயில் நுழைவு வளைவு புதிதாக கட்டப்பட்டுள்ளது.

இதில், அலுவலக வாயில் என்பதை இந்தி வார்த்தையில் “கர்தவ்ய த்வார்” குறிப்பிடுகின்றனர். இதனை, கர்தவ்ய த்வார் என தமிழ் எழுத்துக்களைக் கொண்டும், KARTAVYA DWAR என்ற ஆங்கில எழுத்துக்களைக் கொண்டும் எழுதியுள்ளனர்.

அலுவலக நுழைவாயில் என்பதை தமிழர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத வகையில், தமிழ் எழுத்துக்களை கொண்டு இந்தி மொழி வார்த்தையில் எழுதியுள்ள ரயில்வே நிர்வாகத்தினரை கண்டித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவாயில் முன்பாக, தி.மு.க.வினர், திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி அவர்கள் தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் அவர்கள் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் தடையை மீறி பேரணியாக சென்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள்.

மேலும் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை மைகொண்டு அழித்து ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், மண்டலக் குழு தலைவர் துர்கா தேவி, பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், கனகராஜ்,மாமன்ற உறுப்பினர்கள்,காஜா மலை விஜி, முத்துச்செல்வம், கலைச்செல்வி, ராமதாஸ் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை,மார்ச்.6–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

**அகற்றப்பட்டது இந்தி எழுத்துகள் மட்டுமல்ல; ஆதிக்க வெறியின் ஆணவமும்தான்!**

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிப் போலித் தமிழ்ப்பற்று காட்டுபவர்களும் – அடிமைத்தனத்தின் அடையாளமாய் அவர்களுக்குத் துணை நின்று தமிழ்நாட்டுக்குத் துரோகம் இழைப்போரும் தமிழ்நாட்டு மக்களால் அகற்றப்படுவார்கள்!**

**தில்லியின் ஆணவத்துக்குத் தமிழ்நாடு என்றைக்குமே Out Of Control–தான்!**

**இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.**




## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மக்கள் நீதி மய்யம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மக்கள்நீதி மய்யம் பொதுச் செயலாளர் பி.அருணாசலம் , துணைத் தலைவர் ஏ.ஜி.மௌரியா, துணைத் தலைவர் ஆர்.தங்கவேலு, மாநில செயலாளர் எஸ்.தட்சிணாமூர்த்தி ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - ஆம் ஆத்மி கட்சியுடன் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில் ஆம் ஆத்மி கட்சி மாநிலத் தலைவர் வசீகரன், மாநில குழு உறுப்பினர், மாநில மகளிரணிசெயலாளர் திருமதி ஸ்டெல்லாமேரி, மாநில வர்த்தக அணி செயலாளர் ஜாகீர் உசேன், மாநில பிரச்சாரக் குழு உறுப்பினர்ஜெயக்குமார் (வழக்கறிஞர்) ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### தூத்துக்குடி – தட்டப்பாறை அரசினர் குழந்தைகள் இல்லத்தில் ரூ.7 கோடியில் புதிய கட்டடம் –

## ரூ.10.38 கோடியில் - பணிபுரியும் மகளிருக்கான 2 “தோழி” விடுதிக் கட்டடங்கள்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச். 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.03.2026) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், சிவகங்கை மற்றும் தேனி ஆகிய இடங்களில் 10.38 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிருக்கான 2 “தோழி” விடுதிக் கட்டடங்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் இதுவரை சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருநெல்வேலி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, மதுரை, தருமபுரி, கடலூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய 19 மாவட்டங்களில் 23 தோழி விடுதிகள் நிறுவப்பட்டு, 2,100 பணிபுரியும் மகளிர் பயனடையும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பிற மாவட்டங்களில் பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, மேலும், 22 புதிய ”தோழி” விடுதிகளை 220.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் 2540 மகளிர் தங்குவதற்கான கட்டுமானப் பணிகள் தற்போது முழுவீச்சில் நடைப்பெற்று வருகின்றன.

இன்றையதினம் சிவகங்கை மற்றும் தேனி ஆகிய இடங்களில் 10 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 100 மகளிர் தங்கும் வகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 ”தோழி” விடுதிக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மகளிரின் பாதுகாப்பான, வசதியான தங்குமிடங்கள் தேவைகளை கருத்தில் கொண்டு, பணிபுரியும் பெண்கள் மட்டுமல்லாது பயிற்சி, உயர்கல்வி, நேர்காணல் போன்ற தேவைகளுக்காக நகரங்களுக்கு இடம் பெயரும் அனைத்து மகளிரின் தேவைகளையும் கருத்தில் கொண்டு குறுகிய கால தங்கும் வசதியையும் பயன்படுத்திகொள்ளும் வகையில் இவ்விடுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவ்விடுதிகளில் பயோமெட்ரிக் உள் நுழைவு, 24x7 பாதுகாப்பு வசதி, Wi-Fi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு வசதி, சுடு நீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் மற்றும் பொழுதுபோக்கு அறை போன்ற வசதிகள் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்கும், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகையில் தற்போது, தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறையில் உள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 1649 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தரை மற்றும் முதல் தளம் கொண்ட புதிய கட்டடம் மற்றும் 592 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பூப்பந்து உள்விளையாட்டு அரங்கம் ஆகிய கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

குழந்தைகள் இல்ல கட்டடத்தில் சுமார் 100 சிறுவர்கள் தங்கும் வசதிகளுடன் அறைகள், மருத்துவ சிகிச்சை அறை, சமையல் அறை, உணவுக்கூடம், ஆற்றுப்படுத்துனர் அறை, பல்நோக்கு கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி சரண்யா அறி, மற்றும் தலைமை செயல் அலுவலர் பவன் கைபா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தை கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். இதில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், (BLA 2) பாக நிலை முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.